1981 பிப்ரவரி 10]

Survey of traffic pattern in Madras City

*Q. No. 217.—THIRU S. RAJARAMAN: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) Whether the Pallavan Transport Corporation has undertaken any survey of traffic pattern in Madras City during August-September, 1980; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) சென்னைப் பெருநகரில் பேருந்து போக்குவரத்து மேம்பாட்டிற்கான வழிகளைக் காணும் பொருட்டு கடந்த 1980 ஆகஸ்டு—செப்டம்பர் திங்களில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர் பிரிவு) சென்னை நகரின் மையப் பகுதியில் பொது போக்குவரத்து கனபரிமாணம், போக்குவரத்துத் தன்மை பேருந்து நிறுத்தக் கணக்கெடுப்பு மற்றும் பயணிகளின் கணக்கெடுப்பு போன்ற கணக்கெடுப்புகளை நடத்தியது. பிரம்புக்கடை சாலை, சுபாஷ் சந்திரபோஷ் சாலை, எஸ்பிளனேட் சாலை வடக்கு துறைமுக சாலை, பிரேசர் பால, சாலை ராஜாஜி சாலை, காமராஜ் சாலை, பிராட்வே மற்றும் முத்துசாமி சாலை) ஆகிய சாலைகளிலும், சுபாஷ்சந்திரபோஷ் சாலையில் இணையும் கிளைச் சாலைகளிலும், இக்கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வரும் டிசம்பர் திங்களுக்குள் அக்கணக்கெடுப்பின் முடிவினையும் அது சம்பந்தப்பட்ட ஆலோசனைகளையும் வெளியிடும் நோக்கோடு அப்பணி இப்போது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. விரைவில் வெளியிடப்படும்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே ஓடிய பல்லவன் போக்குவரத்துக் கழகப் பஸ்கள் சிவப்பு வர்ணத்திலே ஓடிக்கொண்டிருந்தன. தற்போது பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் பல ரகங்களாக மாற்றப் பட்டிருப்பது ஏன் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்குமிகு திரு. சு, முத்துசாமி: தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகள் இப்போது மூன்று வர்ணங்களாக மாற்றப்பட்டு ஓடிக்கொண்டிருக்கின்றன. இதற்கு என்ன காரணம் என்பதைச் சொல்கிறேன். புதிய வண்டிகள் அதாவது முதல் 5 ஆண்டு வரை பச்சையாகவும், 5 ஆண்டிலிருந்து 10 ஆண்டு

வரை ப்ளூ கலரிலும், 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பேருந்துகள் சிவப்பு நிறத்திலும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தான் அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது இவற்றின் நிறங்களைப் பார்த்தவுடனே பழைய பஸ்களை மாற்ற வேண்டும் என்ற உணர்வு வரவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் இவ்வாறு மூன்று நிறங்களில் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவில்லிபுத்தூரில் கைத்தறி வளர்ச்சி கழகத்தின் உற்பத்திக் கிளை

*வினா எண். 278. — திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி, கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர் நகரில் கைத்தறி நிதி அண்டு வியாபார கார்ப்பரேஷனிலிருந்து கைத்தறி உற்பத்தி சென்டர் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(இ) கைத்தறி உற்பத்தி சென்டர் ஆரம்பிக்க எத்தனை மனு வந்துள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) தமிழ்நாடு கைத்தறி நிதி மற்றும் வியாபார கார்ப்பரேஷன் தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டு 'தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்' என்று இயங்கி வருகிறது. இக்கழகம் தற்பொழுது கைத்தறித் துணி வியாபாரத்தை மேற்கொள்வதை நிறுத்திவிட்டது. ஆகையால் திருவில்லிபுத்தூரில் இக்கழகத்தின் உற்பத்திக் கிளை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்த கைத்தறி உற்பத்தி சென்டரின் நோக்கம் என்ன? இதற்கு அரசு எவ்வளவு மதிப்பீடு செய்துள்ளது. இது மத்திய அரசின் திட்டமா அல்லது மாநில அரசின் திட்டமா? எவ்வளவு பேருக்கு இதனால் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, கைத்தறி வளர்ச்சிக் கழகம் என்பது தமிழகத்திலே காஞ்சி, ஈரோடு, சேலம், கரூர், மதுரை மற்றும்